# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உரு } சருவசித்து—ஐப்பசி 1947—அக்டோபர் { மலர் எ


## பட்டுக்கோட்டை முத்தமிழ்க் கழகம்.

## திறப்பு விழா

14—1—1948.

முத்தமிழ் வள்ளல், இராவ் பகதூர், திருவாளர்

**A. Y. அருளாநந்தசாமி நாடாரவர்கள்**

**சொற்பொழிவு**

தமிழ்ப் பெருமக்களே,

இன்று, இந்த முத்தமிழ்ச் சங்கத்தின் திறப்பு விழாவிலே கலந்துகொள்வதில், எனக்குள்ள மகிழ்ச்சி அளவிட முடியாதது. இன்றைய நிகழ்ச்சிகளில், நான் பங்குகொள்வதிலே பெருமைகொள்கிறேன். எந்தத் தமிழனும், இதில் பெருமை கொள்ளாமல் இருக்கமுடியாது.

**தமிழ் உலக முதன்மொழி**

நம் தாய் மொழியாகிய தமிழ் தோன்றியது, இன்று நேற்றல்ல. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில், தோன்றியது மக்கள், தங்கள் எண்ணங்களை, கையினாலே சமிக்கை செய்து தெரிவித்து வந்த காலத்தைப் போக்கடித்து, நாவினாலே

பேசும்படி செய்தமொழி, தமிழ் மொழியாகும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானல், முதல் முதலாக மனிதன் தோன்றியது தமிழ்நாட்டில். அவன் முதல் முதலாகப் பேசிய மொழி தமிழ். இவை நான் சொல்வதன்று. ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிபு.

## ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே வளம்பெற்றிருந்தது

தமிழ் மக்களது நாகரிக வளர்ச்சியை யொட்டித், தமிழ் மொழியும் சீர்பெற்று, இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே, பல இலக்கியங்களும் இலக்கணங்களும் கொண்டு விளங்கியது. இந்த உண்மையை ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிருர்கள்.

## இயற் றமிழ்

கருத்தை அறிவிப்பதற்குக் கருவியாக வுள்ளது மொழி. இக்கருவியைத், தமிழர்கள், மூன்ருகப்பாகுபாடு செய்தார்கள். சாதாரண நிலையில் பேசி, கருத்தை அறிவிப்பது, ஒருவகை. இதனை 'இயல்', 'இயற்றமிழ்' என்ருர்கள்.

## இசைத் தமிழ்

ஆண்டவனிடத்தில் அன்புகொள்ளும்படிச் செய்யவேண்டும்; காதலை அறிவிக்கவேண்டும்; வீரத்தைத் தட்டி எழுப்பிப் போருக்கு அனுப்பவேண்டும்; மனச் சோர்வைப் போக்க வேண்டும்; நீதி நெறிகளை எடுத்துச் சொல்லவேண்டும்; இப்படிப்பட்ட காலங்களில், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்குத், தமிழர் கையாண்ட கருவி இசை கலந்த மொழி; 'இசைத் தமிழ்'. இசை, கல்லான மனதைக் கரையச் செய்யும் தன்மை யுடையது; பொல்லாத உள்ளத்தைப் பொன்னுகச் செய்யும் திற முடையது; உரமான உள்ளத்தை உருக்கிப் பதமாகச் செய்யும் வன்மை யுடையது. இயற் றமிழால் ஆகாத காரியங்கள், இசைத் தமிழால் செய்யப்பட்டுவந்தன. தேவாரம், திருவாசகம், முதலிய இசைத் தமிழ் இலக்கியங்கள், சமயத் துறையிலே செய்த வேலை, அளவிடக் கூடியதா?

நம் நாட்டு விடுதலைப் போருக்கு, தமிழ் வீரர்களை ஆக்கித் தந்தது, நமது பாரதியாரின் இசைத் தமிழ் இலக்கிய மல்லவா? நம் தமிழர் சமுதாயத்தில் புகுந்து, தமிழரின் ஒற்றுமையைக் குலைத்து, தமிழரின் வாழ்வைச் சிதைக்கும் பல மூடப் பழக்க வழக்கங்களையும், சமூகக் கொடுமைகளையும், சிதறடிப்பதற்கு, இன்று புரட்சியை உண்டுபண்ணுவது, நம் பாரதியாரின் மாணவராகிய, பாரதிதாசனின், இசைத் தமிழ் இலக்கிய மல்லவா?

## நாடகத் தமிழ்

நிற்க, மூன்ருவது பாகுபாடு, 'நாடகத் தமிழ்'. இதில், 'இயல்' உண்டு; இசை உண்டு; இவைகளோடு 'நடிப்பும்' உண்டு. இந்தக் கருவிதான், மிக முக்கிய மானது. ஏனெனில், 'இயல்', 'இசை' ஆகியவற்ருல் ஆகாத காரியங்களை, 'நாடக'த்தால் சாதிக்கமுடியும். நாடகம், சிறுவர் முதல், கிழவர் வரையுமுள்ள, எல்லோரையும் இழுக்கிறது; கற்றவரே யன்றி, மற்றவரையும் அழைக்கிறது; அறிவாளிகளே யன்றி, புரியாத வரையும் கூப்பிடுகிறது; செல்வரே யன்றி, வறியோரையும் வரவேற்கிறது; சோர்ந்த உள்ளத்துக்கு, ஆறுதல் கொடுக் கிறது. எனவே, நாடகம் செய்யும் முக்கியமான காரியங்க ளில், முதன்மையானது, பலதரப்பட்ட மக்களை ஒன்றுகூட்டு வது. அடுத்தபடியாவது, அங்குள்ள பலவிதக் காட்சிகள் எழுதப்பட்ட திரைகள். நம் முன்னேர் இவைகளை 'எழினி' என்ற பெயரால் அழைத்தார்கள். இவை உள்ளத்தைக் கவர்கின்றன. அடுத்தபடியாவது, 'இசை'. இது உள் ளத்தை உருக்கி, ஒருநிலைப்படுத்துகிறது. பின்னர், நாடக அரங்கத்திலே காண்பது என்ன? உலக நடப்பு; அழகின் சுவைப்பு; அன்பின் பண்பு; கொடுமையின் கெடுதல்; அல்ல லின் அலங்கோலம்; காதலின் பாதை; பிரிதலாற் சோகம்; வீரத்தின் உயர்வு; வறுமையின் வாட்டம்; வண்மையின் தண்மை. அங்கே கேட்பதென்ன? காதற்பேச்சு; கொடி யோர் கடுஞ்சொல்; நல்லோர் இன்சொல்; அறிவாளிகளின் அறவுரை; உணர்ச்சி தரும் வீரவுரைகள் ஆகியவை.

நாடகத்திலே கண்டவையும் கேட்டவையும், உருகி ஒருமனப்பட்ட உள்ளத்தில் பதிகின்றன. அவை எளிதில் மறைவ தில்லை. மக்கள் வாழ்க்கையைச் சீர்படுத்துவதற்கு, நாடகமே ஒப்பற்ற வழி. இந்த உண்மையைப், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நம் முன்னோர்கள் கண்டு, அதனை மொழியின் முக்கிய பகுதியாகக் கொண்டார்கள் என்றால், அவர்களது உளநிலை ஆராய்ச்சியின் முதிர்ச்சியை, அது காட்டுகிறதன்றோ!

## சொல் வள முடையது

தமிழர் நாகரிகம், மிகத் தொன்மையானது. உலகில் பெரும்பகுதி, காட்டுமிராண்டிகள் வாழுமிடமாக இருந்த காலத்தில், தமிழர்கள், சிறந்த முறையில் அமைக்கப்பட்ட அரசியலைப் பெற்றிருந்தார்கள்; கடல் கடந்து வாணிபம் செய்தார்கள்; வேளாண்மையிற் சிறந்து விளங்கினார்கள்; அவரது போர்த் திறம், மெச்சத் தக்கதாக இருந்தது; அவர் களது சிற்பங்களும், ஓவியங்களும், உலகிற் பல பகுதிகளில், இன்றும் சிறந்து விளங்குகின்றன. வானத்தி லுள்ள கோள் களைப் பற்றிய, அவர்களது ஆராய்ச்சி, மேம்பாடுடையது. நாட்களைக் கணித்ததும், மாதங்களை மதிப்பிட்டதும், ஆண்டு களை அளந்து கூறியதும், தமிழர்தாம். தமிழரது மருத்துவ முறை (சித்த வைத்தியம்) இன்றும் சிறந்தது; மிக எளிதும் ஆகும். இப்படி எல்லாத் துறைகளிலும், தமிழர் மேம்பட் டவர்களாக இருந்தமையால், தமிழ்மொழி, சொல்வள முடை யது. எந்தக் கருத்தையும், பிறமொழி உதவியின்றி, தமிழில் சொல்லக்கூடும். புதிய கருத்துக்களுக்கு, தமிழ்ச் சொற்கள் அமைப்பதும் மிக எளிது.

## எவ்வொலியையும் எழுதுதற்கு ஏற்ற வரிவடிவம்

தமிழர்கள், ஒலி வடிவத்துக்கு வரி வடிவம் அமைத்திருப் பதை ஆராய்ந்துபார்த்தால், ஒலியை, எவ்வளவு நுணுக்க மாக ஆராய்ந்து, எழுத்துக்களைச் சித்தரித்திருக்கிறார்கள்

என்பது புலனுகும். தமிழ் எழுத்துக்களில் ஆய்த எழுத்து(ஃ) ஒன்று. இதனை 'அக்கேனு' என்றுதான் நம்முள் பலருக்குத் தெரியும். அதன் பயனைத் தமிழர்கள் மறந்துவிட்டார்கள். நல்லவேளையாக, அந்த எழுத்தைப் பயனற்றதெனக் கருதி, நெடுங்கணக்கிலிருந்து எடுத்துவிடாமல் இருந்தமைக்கு, நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம், உலகில் எத்தனை மொழிகளுண்டோ, அத்தனை மொழிகளையும், தமிழ் எழுத்துக்களால், இந்த ஆய்த எழுத்தின் உதவிகொண்டு, எழுதிவிடலாம். பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றின் ஒலிகளைக்கூட, இந்த எழுத்தின் உதவியால். தமிழில் எழுதிவிடலாம். மதிப்பிற்குரிய மாணிக்க நாயக்கர் அவர்கள், இந்த உண்மையை, நமக்கு எடுத்துக்காட்டினுர்கள். அவர்கட்குத் தமிழர்கள் கடப்பாடுடையவர்கள்.

## இனிய மொழி

தமிழ் மொழி இயற்கையை ஒட்டி அமைந்தது. அழகு வாய்ந்தது. 'யாமறிந்த மொழிகளிலே, தமிழ்மொழி போல், இனிதாவது, எங்கும் காணேம்' என்ருர் பாரதியார்.

## கடல்கோள், மண்கோள், ஐம்பிரிவாதல்

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய தமிழ் மொழிக்கும், தமிழருக்கும் வந்த இடையூறுகள் பல. தெற்கே, தமிழ் நாட்டின் பெரும் பகுதியையும், அங்குள்ள கலைச் செல்வங்களையும், கடல் கொண்டது. வடக்கே, நாகரிகச் செல்வத்தையும், பெரிய நகரங்களையும், மண் கொண்டது. எஞ்சிய இடைப் பகுதியிலே, ஒருவர்பின் ஒருவராக வந்த வேற்ருேர் செய்த தீமைகள் பல.

தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம் ஆகிய மொழிகள், இவர்கள் செய்த சூழ்ச்சியின் பயனுய், தமிழிலிருந்து பிரிந்த மொழிகள் ஆயின என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். தமிழ்ப் பெருமக்கள், ஐந்து பிரிவினராகப்

பிரிந்து, வெவ்வேறு இனத்தவர் என்று கருதும் நிலையிலே இருந்து வருவதை, நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

## உரிமைப் போர்

தமிழருக்குத் தம் வரலாறு தெரியாது. அது, அவர்களிடமிருந்து, மறைத்துவைக்கப்பட்டிருந்தது. நாட்டு வரலாற்றுப் புத்தகங்களிலே, ஏதேதோ, வடநாட்டார் கதைகள் இருக்குமே தவிர, தென்னாட்டார் வரலாறோ, தென்னாட்டு மன்னர்கள் வரலாறோ, சமீப காலம் வரை, இருந்ததில்லை.

எனவே, தாம் இந் நாட்டுப் பழங்குடி மக்கள் என்பதையும், தாம் இருக்கும் நாடு, தமது என்பதையும், தம் மொழி மிகப் பழமையும், சிறப்பும் வாய்ந்தது என்பதையும், தமதான கலையும், நாகரிகமும் உண்டு என்பதையும், உணராதவர்களாக, இருந்து வந்தார்கள்.

இந்த இழி நிலையைக் கண்டு, சகிக்கமாட்டாமல், ஆசிரியர் சுந்தரம் பிள்ளை போன்ற ஒரு சிலர், ஆங்காங்கு, அரற்றி வந்தார்கள். கரந்தைத் தமிழ்ச் சங்கம், போர்வாள் ஏந்தி உரிமைப் போர் தொடங்கிற்று. துணைவர் யாருமின்றி, உரிமைப் போரை நடத்தியது. இப்பொழுது தமிழரைச் சுற்றிப் போடப்பட்டிருந்த 'மாயை' யாகிய திரை, கிழித்தெறியப் பட்டு விட்டது. தமிழர்கள் உண்மையை உணர்ந்து வருகிறார்கள். தமிழ்நாடெங்கும், புத்துணர்ச்சி தோன்றிவிட்டது. அரசியல் துறையிலே எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், 'தமிழ்மொழி வளர்ச்சி', 'தமிழர் வாழ்வு' என்றால், எல்லாத் தமிழரும், ஒன்றுபட்டு உழைக்கும் நிலை வந்து விட்டது.

## தமிழ் முழக்கம்

இந் நாள், எங்கே பார்த்தாலும், தமிழ்ச் சங்கங்கள் தோன்றி வருகின்றன. எங்கும் தமிழ்த் திருநாட்கள். எங்கும் தமிழ் முழக்கம். பாரதியார் கண்ட கனவு, கனவாகி

விட்டது. ‘நாமார்க்குங் குடியல்லோம்’ என்று தமிழர் சின்னம், முழக்கம் செய்கிறது.

### வாழ்த்து

இந்த முத் தமிழ்ச் சங்கம், தமிழர் திருநாளாகிய இந்த நன்னாளிலே தொடங்கப் பெறுவது, பொருத்த மானதே. மங்களம் பொங்கும் இந்த நாளிலே தோன்றும், இச் சங்கம், வளர்ந்து, திடமுடனே உழைத்துத், தமிழரது தன்மான மற்ற நிலையைப் போக்கி, அவரது வாழ்வு பொங்கும்படிச் செய்வதாக.

வணக்கம்

---

## ‘கலைக் களஞ்சியம்’

வித்துவான் மெ. சுந்தரம், கோனாபட்டு.

தமிழ் மொழியின் முன்னேற்றம் கருதி கலைக் களஞ்சியம் தொகுப்பு வேலையைக் கனம் கல்வி அமைச்சர் அவர்கள் துவங்கி இருப்பது பெரிதும் பாராட்டற் குரிய தொன்றாகும்.

தமிழ் மக்கள் இதை உளம் நிறைந்த உவகையுடன் வாழ்த்துதற்கு உரியர். உலகில் பரந்து விளங்கும் நாகரிக மொழிகள் எல்லாவற்றிலும், அம் மொழியின் பெருமையை வெளிப் படுத்துகின்ற கலைக் களஞ்சியங்கள் இருக்கும் பொழுது, தாரணியில் தழைத் துயர்ந்த தமிழ் மொழியில் அக் களஞ்சியம் இதுவரை இல்லாதிருந்தது ஒரு பெருங் குறை பாடே. “என்று முள தென்றமிழ்” என்று கம்பன்

வாக்கிலே கமழ்ந்து, ''தோன்று நிகழ்ந்தது. அனைத்தும் உணர்ந்திடும் சூழ் கலை வாணர்களும், இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல் பினளாம். எங்கள் தாய்'' என்று பாரதியின் கூற்றிலே பழைமையின் செல்வமாய் வெளிக் கிளம்பும் இச் செந்தமிழில் இந்த நாள் வரை ஒரு தொகுப்பு நூல்—நாகரிகம், கலை, வரலாறு, தத்துவம், உணர்த்தும் கலையின் பேழை—வெளிவராத குறைபாட்டை நீக்க முற்பட்ட கல்வி அமைச்சர் அவர்கள், ஒரு செய்தியினை மனத்து உட்கொண்டு ஆக்க வேலை செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இக் கலைக் களஞ்சியத்திற்குப் பன்மொழிப் புலமையும், பல துறை அறிவும் செறிந்த அறிஞர் பெருமக்கள் தேவை என்பதை அனைவரும் அறிவர். அவர்கள் தமிழ் மொழியில் மிகுந்த புலமையும், பற்றும் உடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதும், யாவரும் மறுக்க முடியாத உண்மை. ஆகையால், இக் கலைக் களஞ்சியத் தொகுப்பு வேலையில், தமிழ் நாட்டின் புலவர் மணிகளும்; பன் மொழிக் கலைஞர்களு மான மறைமலை அடிகள், ச. சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் ஆகியவர்களையும் உளப்படுத்த வேண்டும். இவர்கள் புலமையையும் பயன் படுத்திக் கொண்டால், இக் கலைக்களஞ்சிய நூல் பொன்மலர் நாற்ற முடைமை போல, இன்னும் வளஞ் சிறந்து உண்மைத் தமிழ் மரபினை விளக்கும்.

தமிழகம் ஒருதலையாக விரும்பும் இந்த வேண்டுகோளைக் கல்வி அமைச்சர் அவர்கள் கவனித்துக் கலைக்களஞ்சியம் தொகுத்துக் கன்னித் தமிழ் அன்னையின் கழலிணைகளில் உரிமைப் படுத்துவார்களென எதிர்பார்க்கின்றோம்.

# சோழன் மூன்றாம் இராசேந்திரன்
(கி. பி. 1246—1279.)

திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

தமிழகம் பண்டைக் கால முதல் முடியுடை மூவேந்தர்களால் ஆளப்பெற்று வந்தது வரலாற்று இலக்கிய முடிபு ஆகும். அவர்களே, சேர, சோழ, பாண்டியர்க ளாவர். அவர்களுள், சோழனே பல்லாற்றானும் புகழ் பெற்றவன். புலவர்கள், 'தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன்சோழனே' என்றும், 'சோழ வளநாடு சோறுடைத்து' என்றும், நாட்டையும் மன்னனையும் சிறப்பித்தனர். இச் சோழர் சூரிய வம்சத்தினர். காசிப கோத்திரத்தினர். ஆத்தி மாலையைத்தமக்குரிய அடையாள மாலையாகவும், புலியின் உருவத்தைக் கொடியாகவும், இலச்சினையாகவும் கொண்டவர் எனச் சங்கநூல், பிற நூல்களும் கல்வெட்டுக்களும் குறிக்கின்றன. இன்னும் இச்சோழர் பரம்பரை படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவரும் தொல்குடியினதென்பது அறிஞர்களது கொள்கை,

முற்பட்ட வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன் படுபவை, கல்வெட்டுக்கள், அக்கால நாணயங்கள், கோயிற் சிற்ப நுணுக்கங்கள், சிற்ப வடிவங்கள், இலக்கியங்கள், வேறு நாட்டு யாத்திரிகர்களின் குறிப்புக்கள் முதலியன. இவைகள் ஒவ்வொன்றும் பற்பல விளக்கங்களைக் கொடுப்பினும், மிகவும் கையாளப்படுவன கல்வெட்டுக்களே யாகும். அவைகளும் நமக்கு வேண்டும் வகை கிடைத்தில. கிடைத்த மட்டில் துருவித் துருவி ஆராய்ந்தவையே ஒருவாறு நமது தமிழகத்தின் வரலாற்றையும், சிறப்பாக இங்குச் சோழர்களது விளக்கங்களையும் கொடுப்பன.

சோழர்கள் முற்காலச்சோழர், வரலாற்றுக்கால-பிற்காலச் சோழர் என இரு கூறுவர். முன்னவரது குறிப்பு ஒரு சிலவே, சங்க இலக்கியங்களிலும், மற்றும் நூல்களிலும், சோழன் கரிகாலன், குளமுற்றத்துத் துஞ்சிய சோழன், கிள்ளி வளவன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருநற்கிள்ளி, கோச்செங்கணான் என்று, பெயரளவில், சில சில குறிப்புக்களே தெரிவன.

பிற்காலச் சோழர்கள் கி—பி 3-ம் நூற்றாண்டிற்கு முன்னரே, தமிழகத்தில் சிறப்புற் றிருந்தமை அசோகனது தூண்களில்

உள்ள கல்வெட்டாலும், பல யாத்திரிகர்களது குறிப்பாலும் காண்கிறோம். சோழர்கள் தம் நாட்டாட்சியுடன், சிங்களத்தையும் வென்று அந்நாட்டுடன் சேர்த்து ஆண்டனர். இவ்வாறிருப்ப, தமிழகத்தில் பல்லவர், காகதியர்கள் போன்ற மற்றக் குடியினரும் வந்து அரசாள முற்பட்டதில், பல்லவர்களே 8ஆம் நூற்றாண்டு வரை மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், இராசசிம்மன் போன்றவர்கள் பேரரசர்களின் கீழ்ச் சோழநாட்டுஅரசியலைத் தாங்கினர். அப்போது சோழர்கள் வலியிழந்து, குறுநில மன்னராய்ச் சோணாட்டின் பல பாகங்களில் உறைந்து, பல்லவர்களுக்கு அடங்கித் திறை செலுத்தி வந்தனர். காலச் சக்கரம் சுழலவே, பல்லவ பரமேச்சர போத்தரையனுக்குப் பிறகு அவர்கள் செல்வாக்குத் தாழ, சமயம் பார்த்திருந்த புலிக் கொடியினர் மீளவும் தம்மரசைப் பெற்றனர்.

அவர்களில் முதலானவன் விசயாலயன். இவன் காலம் கி.பி. 849. அவன் மிக்க ஆற்றலுடையான். இவனையே, 'தொண்ணூற்றாறு புண்கள் மார்பிலே கொண்ட வீரன்' எனத் தமிழ் நூல்கள் புகழ்கின்றன. சோழ மண்டலத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றினன். தஞ்சாவூரைத் தலைநகராக்கினன். இவனதும், இவன் பின்னோர்களதுமான வரலாற்றுக் குறிப்புகள் மிகப்பல. அவர்களுள் முதல் இராசராசனே தனது கல்வெட்டுக்களில், வெறும் புகழ்ச்சி மட்டுமின்றித், தனது வெற்றிகளைப்பற்றியும், நாட்டின் அரசியலைப்பற்றியும் இன்றும் என்றும் நிலைபெற்ற அழியாப் புகழுடையனவற்றையும், பொறித்து வைக்கத் தொடங்கினவன். சோழர்கள், விசயாலயன் முதல் அவர்களிற் கடைசியான மூன்றாம் இராசேந்திரன் வரை, 400 ஆண்டுகள் சோணாட்டை அரசாண்டனர். அவன் பின்னோர்களும் அதனைக் கையாண்டனர். ஆகவே, முதல் இராசராசனே நமது வரலாற்றுக்கு அடிகோலினவ னென்னலாம். தமிழக வரலாற்றில் இக்காலமே பொன்கால மென்னலாம். இவர்களின் சிறப்பும் புகழும் மிகவும் விரிவாகக் கிடைப்பனவாகும். இவ் வரச பரம்பரையில், முதலாவது இராசராசன், முதலாவது இராசேந்திரன், முதலாவது குலோத்துங்கன், இவர்கள் மிகப் பெரியார்கள். இதற்குப் பின் போந்தவர், பின் போந்தவரே யாவர். முதலாவது குலோத்துங்கனது ஆட்சியின் இறுதியாகிய கி.பி. 1120இல் சோழராட்சி வடக்கே, கன்னேசி, கார்த்வால் முதலாக வெங்கி நாடும், துங்கபத்திர நதி முதல் இப்போதைய் கடப்பை, கர்நூல், மைசூர் பகுதிகளும், தெற்கே திருச்சிராப்பள்ளி, தஞ்சை, வட, தென் ஆர்க்காடு, சேலம் மாவட்டங்களாலும் அமைந்தது. இப் பகுதிகள் கடைசி வரை சோழராட்சியின் பகுதியாகவே இருந்தன.

ஆனால், முதற் குலோத்துங்கனுக்குப் பிறகு, சோழர்களின் வலிவு குன்றியதே யாகும். வரலாற்றுக் காலச் சோழர்களில் கடைசி மன்னவனாகிய மூன்றும் இராசேந்திரனுக்கு மிக முன்னதாகவே, சோழர்களின் நிலை குலையத் தொடங்கிற்று. அன்னவர்கள் வீரர்களல்லாது, வீண்பொழுது போக்கும் வீணர்களாகவு மிருந்தனர். அரசியல் சூழ்ச்சியுடையாரு மல்லர். தமது வலிவு குறையவே, அவர்களது தண்டநாயகர்களே சிற்றரசர்கள் போன்று மேம்படத் தொடங்கினர். இன்னும் சோழர் வலி குறையவே, மற்ற ஒய்சாளர், தெலுங்கு சோடர்கள், பல்லவ அவனியாளப்பிறந்தான் போன்ற வலுவினர்–நாட்டைச் சின்னபின்ன மாக்கினர். தெற்கே பாண்டியன்; மேற்கே போசளன்; இன்னும், காடவர்கோன் போன்ற சிற்றரச தண்டநாயகன் கோப்பெருஞ்சிங்கன். இவன் மூன்றும் இராசராசனைச் சேந்தமங்கலத்தில் சிறைப்படுத்தவும் ஆயினன். சோழன் தன் நாட்டை விட்டு ஏகவே, தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரம் கொள்ளை யடிக்கப்பட்டுத் தகர்க்கப்பட்டது. சோழன் தனது நண்பன் போலே போசளநரசிம்மனது உதவியால் சோழ அரசைத் திரும்பப்பெற்றான். இச்செயல்களால் சோழர்களின் பெருமிதம் குறையவே, சிற்றரசர்கள் ஆற்றலை மேற்கொண்டனர்.

இந் நிலையில் இச்சோழ வம்ச இறுதி மன்னனான இராசேந்திரன் 1246 இல் இளவரசுப் பட்டம்தரித்தான். இவன் மூன்றும் இராசராசனது மைந்தனென உறுதி கூற முடியாது. கல்வெட்டு ஆராய்ச்சி இன்னும் இதனை விளக்கவே வேண்டும். அதற்கு முந்திய பத்து ஆண்டுகளாகத் தன்னுடன் கூட மூன்றும் இராசராசனும், செங்கோல் செலுத்தியதாகவும், கடைசி மூன்று ஆண்டுகளில், இராசேந்திரன் வீறுபெற்று எழுந்து, இழந்துபோன நற்கீர்த்தியையும், செல்வாக்கையும் பெற்று பாண்டியனை முறியடித்து, ஒருவனைக்கொன்று வெற்றி பெற்றானென்றும் திரிபுராந்தகக் கல்வெட்டு ஒன்றில் காணும், 'இருவர் பாண்டியர் முடித்தலை கொண்டருளின' – என்ற சொற்றொடர்களால் அறிகிறோம்.

ஆகவே, கடைசி இராசேந்திரன், மூன்றும் இராசராசனை விட ஆற்றலுடையானென்றே சொல்லல்வேண்டும். இவனது ஆட்சியில் பொறித்துள்ள கல்வெட்டுகள் பல, கோவிலூர் *1மத்திய புரீசுவரர், திருவீழிமிழலை *2 வீழிநாதசுவாமி திருவரங்கம் *3 அரங்கநாதசுவாமி, மற்றும் கோயில்களிலும் காணப்படுவன. இவனது 7ஆம்ஆண்டினது திருவரங்கம் சாசனமொன்றில், தான்

*1 Ins. 208, 213, 223, and 216 of 1908. *2 Ins. 412 of 1908.
*3 Ins. 64 and 65 of 1892.

வட இலங்கையை யழித்த இராமனென்றும், மனுவம்ச வழித் தலைவனென்றும், மணிமுடி தரித்த பாண்டியனின் தலையைக் கொய்தவ னென்றும், அவனது முடிதரித்த தலையை உதைத்தவ னென்றும், கர்நாடக அரசின் யமனென்றும், போசள வீர சோமேசுவரனை வென்றானென்றும் கூறிக்கொள்ளுகிறான். தென் பாக்கம், சிற்றம்பலமுடையார் கோயில் கல்வெட்டில் தன் நில தானங்களைக் கூறுமிடத்துத் தான் 'இருமுடி தரித்த பாண்டியர் களை' வென்றவ னென்றும், 'மகா ராஜாதிராஜ, திரிபுவன சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவ னென்றும்,' கூறிக் கொள்ளுகின்றான். மற்றொன்றில் 'மனு குல மெடுத்த பெருமாள்' எனப்படுகிறான். ஆகவே, இவன் உண்மையில் வீரனென்பது இன்னும் பல சான்றாலும் தெரிய வருவன. தான்மாவிலவனையில் வீர ராக்ஷசர்களை வென்றதும், வடக்கே காக்கதியர்கள், சம்புவ ராயர்கள், நெல்லூர் நாட்டு தெலுங்கு சோழர்கள் இவர்களுடன் போர் செய்ததும், பின்னர் உறவு கொண்டும், ஒய்சாள வீர சோமேசுவரனுடன் நட்புக்கொண்டும், அரசியல் ஆட்சியில் பல்லாற்றானும் மேம்பட்டிருந்தா னென்றும் காணக் கிடக் கின்றன. சோழ அரசு பொதுவாகச் சீர்குலைந் திருந்தும், காடவர்கோன், கலிங்கர், வைதும்பர், துளம்பர், கங்கர்களும், பிறரும் அவன் கீழிருந்தனர்.

ஆனாலு மென்ன? காலச் சக்கரம் மறுபடியும் வேலை செய்யத் தொடங்கியது. தன் கீழ் உள்ள சிற்றரசர்களும் எழத் தொடங்கி னர். ஒய்சாள வீர சோமேச்சுரன் 'சமயம் பார்த்துச் சோழ னுவது, பாண்டியனுவது தலையெடுக்க வொட்டாது, ஒவ்வொருவர் மீளும்போது மற்றவருடன் நட்புப்பேணி, ஒரு முறை சோழனுக் கும் மறு முறை பாண்டியனுக்கும் உதவி புரிந்து தன் ஆதிக்கத்தை எப்போதும் போல நிலையாக வைத்திருந்தான். ஆனால், ஒரு பெருவெள்ளம் காத்திருந்தது. அது தான் பாண்டியர் களின் நற்காலம். ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் 1251 இல் பாண்டிய அரசு கட்டிலேறினான். அவன் பெருவீரன். அவ னுடன் மூன்றாண்டுகள் இராசேந்திரன் பொருது மயங்கினான். நெல்லூர் நாட்டில் ஆண்ட சோடதிக்கா வென்ற கந்தகோபால னரும் சமயம் பார்த்திருந்தான். ஆகவே, சோழனும், பாண்டி யனும், தொலுவடு சோடனும், ஒய்சளனும் ஒவ்வொருவரும், தனது ஆட்சியை நிலை நிறுத்த ஒருப்பட்ட காலம் ஆதலின், இரா சேந்திரன் எவ்வாற்றானும் ஒய்சாளனது நட்பைப் பெற முயன்றான். ஆயினு மென்ன? ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் பாண்டிய அரசை மீண்டும் முன்பிருந்த உன்னத நிலைக்குத் தனது ஏழாவது ஆண்டுக்குள் கொண்டு வந்து விட்டான்

இராசேந்திரன் கப்பங் கட்டினுன். ஒய்சாளன் மைசூர் நாட்டிற்குள் ஒளிய வேண்டிய தாவதுங் கூட, வீசாமேசுரன் பாண்டியனுடன் போருக்கு வரவே, 1264 இல் கண்ணனூர்ப் போரில் தன் உயிரையும் இழந்தான். இம்மாதிரியாக, பாண்டியன் ஜடாவர்மனின் ஆட்சி நாளொரு மேனியாக வலுக்கவே, இராசேந்திரன் வலிவு இன்றி, தனது இருப்பிடம் தெரியாது மறைந்திருக்க வேண்டியதாயிற்று.

இவ்வாருகிய நிலையில், மூன்றும் இராசேந்திரனது செல்வாக்கு மிகவும் வளங்குன்றியது. அவன் ஒய்சாளனது துணையுடன் 33 ஆண்டுகள் ஆட்சி செய்திருந்தும், மிகச் சில கல்வெட்டுகளே தோன்றின. அவைகளும் அவனது ஆட்சியின் 15 ஆண்டிற்கு பின்னுவதல்ல. கடைசியானதான ஒன்று 1259இல் கடப்பை மாவட்டம், நந்தலூரிலும், 1261 ஆம் ஆண்டிலுள்ள மற்ருென்று, கர்நூலிலும் காணப்படுவன.

ஆகவே, இராசேந்திரனைப் பற்றிய குறிப்புக்கள் மிகச் சிலவே. சோழராட்சியின் குழப்பங்களினுலும், பாண்டியர்களின் ஆதிக்கம், தலைசிறந்த ஒரு வீரனுகிய சடையவர்மன், முதலாம் சுந்தர பாண்டியன்கீழ் (கி. பி. 1251-1274) ஏற்பட்டதனுலும், சோழராட்சி நாளடைவில் சீர் குலைந்ததாலும், சோழர்களின் நல்வினை முதிர்ச்சியாலும் திருவாற்றல்களாலும் நிரம்பிய தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரம் பகை அரசர்களால் முற்றிலும் அழிக்கப்பெற்றுச் சிறுமை யெய்தியதாலும், போதிய குறிப்புக்கள் வெளி வந்தில. அரசனும், தன் இல்லற வாழ்க்கையில், உறவின்முறையினர்களிடத்தும் நட்புடன் நடந்துகொள்ளாது, தான் தன் மதிப்புப் பேசித், தன் மாமன் முதலியவர்களுடன் மாறுகொண்டதன் பயனுக, அவனுடைய இறுதி ஆக்கம் மிகவும் குறைந்தது. இவனது மனைவி பெயர், சோழகுல மாதேவியார் எனத் திருவெண்ணெய் நல்லூர் *1 கல்வெட்டு ஒன்று கூறுகிறது. பிள்ளைகளைப் பற்றிய குறிப்பில் சேமப் பிள்ளை *2 என்ற ஒருவனை நம் மகன் என்ற சொற்களால் கூறியிருப்பினும் அவனது குமாரன் என உறுதியாகக் கூற இயலவில்லை. இன்னும் அவனது சிற்றரசர் *3 இருவர், சோழகங்கன், களப்பாளன் என்று குறிக்கப்படுகின்றனர், இவனது வழிபடு தெய்வம் *4 தில்லையுள் ளாடும் நடராசனும் கூத்தப்பெருமான் எனவும் தெரிகின்றது. இவ்வாருக இராசேந்திரன் கடைசி காலத்தே, பாண்டியராட்சி தலைசிறந்து விளங்கியதும் தவிர,

*1 427 of 1921. *2Ins. 515 of 1922 *3 760 A. R. E. 1923. II 45; Ins. 93 of 1897. 194 of 1926. 202 of 1908. 334 of 1925.

சீன, அரேபிய யாத்ரீகர்களாலும் கொண்டாடப்பெற்றுள்ளது. ஆனாலும், இராசேந்திரனுக்குப் பிறகு ஒரு அரசன் சோழர் அரசு கட்டிலில் வீற்றிருந்தான் எனக் கூறவும் இடமில்லாது, சோழ ராட்சி முழுதும பாண்டிய ராட்சியில் அடங்கி விட்ட தெனவும் தெரிகிறது. இனி, நமக்குக் கிடைத்துள்ள ஆதரவு களில் தெலுங்கு சோடர்களும், விசயநகர *** அச்சுத தேவராய னின் பிற்காலத்தே சோழர்களது பெயரைக் குறிக்கின்றதைத் தவிர, கடைசியாகக் கி. பி. 1554 ஆம் ஆண்டில் கும்பகோணம் ஆதிகும்பேசுரர் *ஆலயத்துக்கு இரண்டுகிராமங்கள் நிபந்தமாக விடப்பட்ட விபரம், சோழர் மரபிலுதித்த, மகாமண்டலேசுர, குருராஜ ருத்ரதேவ சோழ மகாராஜா என்பவர் காலத்தே என்பது தான். இதைத் தவிர யாதொரு குறிப்பும் பின்னர் தெரிந்திலது.

படைப்புக் காலந் தொடங்கிய சோழ மரபினர் 13 நூற் ருண்டிற்குள் இரண்டு தடவை தோன்றி மறைந்தனர். அவர் களது குடும்பத்தினர் எங்கு மறைந்தனரோ? அவனே அறிவான். ஆகவே, விசயாலயன் காலத்தில் தொடங்கி, முதல் பராந்தகனால் நிலை நாட்டப்பெற்றும், முதல் இராசராசனால் பெருக்கப்பட்டும், தக்க சிறப்புடன் விளங்கி வந்த சோழ ராட்சி ஆற்றல், 3ஆம் குலோத்துங்கன், அவன் மகன் மூன்றும் இராசராசன், அவன் மகன் 3ஆம் இராசேந்திரன் என்னும் அரசர்கள் கையிலகப் பட்டுச் சீர் குலைந்து அழிந்தது.

இத் தமிழ் வேந்தர்களான சோழர்கள் தங்கள் ஆட்சியும், வீரமும் இழந்து தாழ்வுற்றன ரெனினும், அவர்களது ஆதரவின் கீழ் வெளிவந்துள்ள தமிழ் நூல்களும், அவர்களால் எடுப்பு விக்கப்பெற்ற கணக்கற்ற திருக்கோயில்களும், வெட்டப்பெற்ற பேராறுகளும், கட்டப் பெற்ற அணைகளும் இன்னும் நிலை பேறு டையனவாய், ஆன்றோரது பெருமை யனைத்தும் நம்மனோருக்கு உணர்த்தும் கலங்கரை விளக்க மென நின்று நிலவுதல் நமக்கு மகிழ்ச்சி யளிக்கின்றது.

---

*** Kolijivadi plates of Atchutha Deveraya. Bharati Angirasa Sravana. * Ins. 291 of 1927.

# உரிமை வாழ்வில் இலக்கியப் பணி.

வித்துவான் திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை,
அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி துணர் 23, மலர் 5, 6, பக்கம் 124.)

இனி, அச்சம் என இழிவாகப் பேசப்படுவது, செய்தற்குரிய அறங்களைச் செய்தற் குண்டாகும் அச்சமே. பழி பாவங்கட்கு அஞ்சும் அச்சம் அற மெனவும், ஏனைய அறங்களைச் செய்தற்கு அஞ்சும் அச்சம் குற்ற மெனவும அறநூல்கள் கூறுகின்றன. குற்ற மான அச்சம் இருத்தல் கூடாது என்பது அறவோர் துணிபு. இதனால் தான், 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்றார் திருவள்ளுவர். பாரதியாரும் 'அச்சம் தவிர்' என்றார்.

உரிமை வாழ்வில் அவரவர் உரிமைக்குக் கேடுண்டாகுமோ என அஞ்சும் அச்சம் இருத்த லாகாது. பெரும்பான்மையோர் கருத்து மேலோங்கும் வகையில் சிறுபான்மையோர் உரிமை பறிக்கப்படுமென்னும் அச்சம் அச்சிறுபான்மையோர்க்கு உண்டாகக் கூடாது. இவ்வாறே வலியோர் மெலியோரை நலிவதாலும், செல்வர்கள் வறியோர்களை வருத்துவதாலும், வலிமிக்க நாட்டவர் அது குறைந்த நாட்டவரை அடர்ப்பதாலும், இடஞ் சிறிதென்று பிறர் மண்ணைக் கவரும் பெருநசையாலும் உரிமை வாழ்வுக்கு ஊறுண்டாகும். அதுபற்றி மக்கட்கு அச்ச முண்டாதல் ஒருதலை. வலியோராலும் செல்வர்களாலும் உண்டாகும் அச்சம், அரசியலின் செவ்விய நேர்மையால் நீங்கும். பண்டைத் தமிழ் வேந்தர், செல்வ ரென்றும் வலிய ரென்றும் கருதி ஒரு சிலர்க்குச் சலுகை மிகத் தருதலும், வறிய ரென்றும் மெலியவ ரென்றும் கருதி ஒரு சிலரைப் புறக்கணித்தலும் இலர். இதனால் உண்டாகும் பொருள் வேந்தர்க்கு இம்மை மறுமை இருமையும் கெடுக்கும் என்பது அவர் கருத்து. 'செம்மையின் இகந்தொரீஇப் பொருள்செய்வார்க் கப்பொருள், இம்மையும் மறுமையும் பகையாவ தறியோ' (கலி. 14.) என்றும், 'அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை' என்றும் எடுத்தோதுவது காண்க. இதனால், எளியவர்கள் தமக்கு வலியவரால் துன்ப முண்டாயின், அவர்முன் அச்ச மின்றிக் கண்ணறப் பேசும காட்சியுடையராய் இருந்தனர்.

சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தானும் தாமப் பல் கண்ணனு ரென்னும் சான்றோரும் வட்டாடினர். அப்போது மாவளத்தான், தன் செல்வச் செருக்கால் சினங்கொண்டு தான் ஆடிய வட்டினுல் பல்கண்ணனுரை எறிந்து வருத்தினுன். அவர், அவன் செல்வச் சோழ வேந்தன் தம்பி யென்றும் பாராது, சிறிதும் அச்சமின்றி,

'நேரார்க் கடந்த முரண்மிகு திருவின்,
தேர்வண் கிள்ளி தம்பி! வார்கோல்
கொடுமர மறவர் பெரும! கடுமான்
கைவண் தோன்றல்! ஐய முடையேன்
ஆர்புனே தெரியல்நின் முன்னுே ரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர். மற்றிது
நீர்த்தோ நினக்கு?'

என வெறுப்பக் கூறினர். ஒருகால், குராப்பள்ளித் துஞ்சிய சோழன் பெருந்திரு மாவளவன், மதுரைக் குமரனுர் தன்பால் வறுமை யுற்றுத் தாழ்ந்து இரக்கின்ரு ரெனக் கொண்டு அவரை இகழ்ந்தான். அவ்விகழ்ச்சி பொருத குமரனுர், அரச னெனக் கருதி யஞ்சுவது சிறிது மின்றி,

'மண்கெழு தானே யொண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே;
எம்மால் வியக்கப் படூஉ மோரே
சீரூர் மன்ன ராயினும் எம்வயின்
பாடறிந் தொழுகும் பண்பி னேரே.'

என்று கூறித், தமது உரிமையை நிலை நாட்டினுர்.

மண்ணசை குறித்தும், வலி மிகுதி குறித்தும், பண்டை வேந்தர் பிற வேந்தரொடு போர்தொடுத்தனர். அவருள், பாண்டி வேந்தரும், சேர வேந்தரும் பெரும்பாலும் போருடற்ற வேண்டி யிருந்தது, இடஞ் சிறிதென் றெழுந்த மண்ணசை குறித்தே யாகும்.

'வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்,
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொருது,
இடஞ் சிறிதென்னும் ஊக்கம் துரப்ப,
ஒடுங்கா வுள்ளத்து ஓம்பா ஈகை,
கடந்தடு தானேச் சேர லாதன்'

என்பதனுல், சேரனும்,

'மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வவ்வலின்,
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினுன் வணக்கிய வாடாச் சீர்த்தென்னவன்'

என்பதனுல் பாண்டியனும் இடச் சிறுமை காரணமாகப் போருடற்றினமை துணியப்படும். படவே, கொடியும் முரசும் கொற்ற வெண்குடையும், பிறர் கொளப்பொருது போருடற்றும் இயல்பு சோழருக்கே உண்டென்பது பெறப்படும். இவ் வகையால் மூவேந்தர்க்கும் அடிக்கடி போருண் டாயினவெனக் கொள்ளலாம். போர்த் துறையில் ஊர்களைச் சூறையாடுதலும் எரிபரந் தெடுத்தலும் உண்டு. இவ்வகையால் உயிர்க்கேடும் பொருட் கேடும் மிகுதல் முறை. இதனுல் மக்கட்கு அச்சம் பெரிதாம். அரசியலில் உரிமைபெற்ற சான்ருேர் வேந்தர் கருத்துக்கு இயைய வேண்டுவனவற்றைச் சூழ்ந் துரைப்பாராயினும், போரால் நேரும் கேடுகளை அவர்கள் உணராமல் இருந்ததில்லை. போர் முடிவில் வெற்றி பெற்ற வேந்தர்க்கு அப்போரால் நிகழ்ந்த கேடுகளை ஓவியம்போற் காட்டிப் போர்மேற் செல்லும் அவர்கள் உள்ளத்தை மாற்ற முயன்றதும் உண்டு.

'பாடல் சான்ற பயங்கெழு வைப்பின்
நாடுகவின் அழிய நாமம் தோற்றிக்
கூற்றடூஉ நின்ற யாக்கை போல
நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்
உள்ளம் அழிய ஊர்க்குநர் மிடல்தபுத்து
உள்ளுநர்ப் பனிக்கும் பாழா யினவே,'

என்றும்,

'அழல்மலி தாமரை யாம்பலொடு மலர்ந்து
நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப
அரிநர் கொய்வாள் மடங்க, அறைநர்
தீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த
இன்ருே அன்ருே தொன் ருேர்காலை
நல்லமன் அளிய தாமெனச் சொல்லிக்
காணுநர் கைபுடைத் திரங்க
மாணு மாட்சிய மாண்டன பலவே'

என்றும் எடுத்தோதி யிருப்பது அவரது உரிமைப் பண்பை வெளிப்படுத்துகிறது.

போரில் படையேந்தி நின்று வெற்றிபெற விரும்பும் மறவர் உயிர் கொடுத்தற்கு அஞ்சுவது கிடையாது. அஞ்சாமையல்லது துணை பிறிதின்றி நின்று விளக்கமுறும் வீரனெருவன் மனைவி யைக் கண்ட பெருந்தலைச் சாத்தனர், 'நின் கணவன் போர் வீரரை ஏறட்டு நின்று வருக என அழைத்தான் ; பாம்புமிழ்ந்த

மணிகண்டும் அதனை நெருங்குதற்கு மக்கள் அஞ்சுவதுபோலப் பகை வீரர் அனைவரும் அஞ்சினர்' என்பார்,

'தமர்பிறர் அறியா அமர்மயங் கழுவத்து
இறையும் பெயரும் தோற்றி நுமருள்
நாள்முறை தபுத்திர் வம்மின் ஈங்கெனப்
மலைந் தொருசிறை நிற்ப யாவரும்
அரவுமிழ் மணியிற் குறுகார்
நிரைதார் மார்பின்நின் கேள்வனைப் பிறரே'

என்று கூறுகின்றார். பெற்ற தாயொருத்தி போருக்குச் சென்ற ஏனை வீரரெல்லாரும் வந்தும் தன் மகன் நெடிது வாராமை கண்டு, நெஞ்சில் அச்சமோ அவலமோ கொள்ளாமல்,

'எல்லா மனையுங் கல்லென் றனவே
வேந்து உடன்று எறிவான் கொல்லோ
நெடிது வந்தன்றால் நெடுந்தகை தேரே' (புறம்-296)

என்று கூறுகின்றாள். போரில் அணி வகுப்புற்று நிற்கும் வீரன் ஒருவன் வேந்தன் தன்னை முந்தச் செலுத்தாமைக்கு வருந்தி,

'எமக்கே கலங்கல் தருமே, தானே
தேறல் உண்ணும் மன்னே, நன்றும்
இன்னான் மன்ற வேந்தன் இனியே,
நோரார் ஆரெயில் முற்றி
வாய் மடித்து உரறிநீ முந்துஎன்னானே'

என்கின்றான். இவ்வாறு பண்டை உரிமை வாழ்வில் திளைத்த தமிழ் மக்கள் அச்சம் இலராய் வாழ்ந்த செய்திக்குச் சான்றுகள் பலவுண்டு. இல்லையானால் 'நளியிரு முந்நீர் நாவா யோட்டி, வளி தொழிலாண்ட உரவோர்' எனும் பெயரை எய்த முடியுமா?

உரிமை வாழ்வுக்குஅடுத்த உறுப்பாவது வறுமையின்மை வறுமை நிலை ஒரு நாட்டின் உரிமை வாழ்வைக் கெடுத்துச் செல்வமுள்ள நாட்டுக்கு அதனை விரைவில் அடிமையாக்கிவிடும். 'வறியார் இருமை அறியார்' என்பர். வறுமையுள்ள நாடு அறிவு ஒழுக்கங்களில் நலம்பெறாது; செல்வத்தைப் பெருக்கும் துறைகளான கைத்தொழில் வாணிபம் உழவு முதலிய செயல் வகைகளில் சீர் பெற முடியாது. நாட்டில் செல்வர் சிலரும் வறியார் பலருமாக இருத்தற்குக் காரணங் காணவந்த திருவள்ளுவர் தவமுடையார் சிலரும் அஃது இல்லார் பலருமாதல் காரணம் எனக்கருதி, 'சிலர் பலராகிய காரணம் நோற்றார் சிலர் பலர் நோலாதவர்' என்றார். எனினும் அதனை அவ்வாறே சொல்லி நெகிழவிட இக்காலநிலை ஒருப்படாது. இக்காலம் உழைப்பில்

லாமை வறுமைக்குக் காரணம்; உழைப்பில்லாதவர் ஒருவரும் இருத்தலாகாது. உழைப்பவர் உழைத்தற்கு நாடு வேலை தர வேண்டும். அவ்வேலையை நாட்டு மக்கள் நடத்தும் அரசியல் நேரிய முறையில் கண்டு அமைத்து உழைப்பாளிகட்டு உதவ வேண்டும என்பது இன்று நிலவும் கொள்கையாகும்.

வறியவர் முன்னைத் தவம் இல்லாராயினும், இவ்வுலகில் வாழ்தற்கு உரிமையுடையவர். அதற்கு வேண்டும பொருளை அவர் பெறுவாறு தவமில்லாமை இடைநின்று ஊழ்வினை வடிவாய் நின்று தடுக்குமாயின், முன்னைத் தவமுடைமையால் செல்வம் பெற்றவரும் பெறுதற்குரிய வலியும் ஆற்றலுமுடையவரும், வறியவர் வேண்டுவன நல்கி வாழ்வித்தல் அறமெனக் கருதினர். திருவள்ளுவர் முதலிய சான்றோர் இக்கருத்துக்கு ஆதரவு தந்தனர். 'சுற்றத்தார் சுற்றப்பட ஒழுகல் செல்வம், பெற்றத்தால் பெற்றபயன்' என்பது திருக்குறள். அதுவே, 'வறியார்க்கொன்று ஈவதே ஈகை' என்றும், 'ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது, ஊதியம் இல்லை யுயிர்க்கு' என்றும் அறவுரை வழங்கிற்று. செல்வமும் அதனைச் செய்தற்குவேண்டும் வலியும் பெற்ற திருவாளர், இரப்போர்க் கீதல் சிறப்பென்றும், ஈயாமைக் கேதுவாகிய வறுமை இழிவென்றும் கருதி வஞ்சினங் கூறும்போது, 'புரப்போர் புன்கண்கூர, இரப்போர்க் கீயா இன்மை யான் உறவே' என்றும், 'மெல்லிய லரிவை நின் நல்லகம் புலம்ப, நிற்றுறந் தமைகுவெ னாயின் எற்றுறந்து. இரவலர் வாரா வைகல், பலவா குகயான் செலவுறு தகவே' (குறுந். 137) என்றும் கூறுவது காணலாம்.

இவ்வண்ணம் வறியாரது வறுமை தீர்த்தற்கண் பேரார்வங் கொண்டு தம் முயிரையே யளித்த வள்ளல்கள் வரலாறு சங்க இலக்கியங்களில் மலிந்து கிடக்கிறது. வேள்பாரி உயிரிழந்ததும் குமணன் தலையிழக்க நேர்ந்ததும் வறுமைக்கடலை ஈகையாற் கடக்கக் கருதியதனுலே யாம்.

கொங்கு நாட்டில் ஈரோட்டுக் கருகில் உள்ள ஈஞ்சூருக்குப் பண்டை நாளில் ஈர்ந்தூர் என்பது பெயர். அந்த ஊர்க்குத் தலைவன் ஒருவன் கோயமான் என்னும் பெயருடன் விளங்கினான். அவன் தன்பால் வருவார்க்கு வேண்டும் பொருளை நிரம்பத் தரத்தக்க செல்வ முடையனல்லன். ஆயினும், இல்லையெனச் சொல்லி உள்ளது மறைத் தோதி மறுக்கும சிறுமையும் அவனிடம் கிடையாது. அதனுல் அவனை நாடி இரவலர் சென்ற வண்ணம் இருந்தனர்; அவனும் இயன்ற அளவு அவர்கட்கு உதவி வந்தான். அதற்குச் செல்வம் ஏது? அவன் கொள்ளைக் கூட்டத்தைச்

சேர்ந்தவ னல்லன். அவன் வாழ்ந்த நாட்டுக்குரிய முடிவேந் தன் சேரமான் குட்டுவன் கோதை யென்பவன். அவ் வேந்தன் பொருட்டு இக் கோயமான் படையேந்திப் போர் பல செய்து அதனால் பொருள் பெற்றான். அவ்வாறு பெற்ற பொருளே அவன் கொடைக்கு ஆக்கமாயிற்று. போர்க்குச் செல்வதும் வென்றியொடு பொருள் பெறுவதும் அவன் செயல்களாயின. அன்றியும், இரவலர் வறுமை காண அவன் பொறான். வறுமை யில்லாமை நாட்டிற்கு அழகு என்றும், வறுமை தீர்த்தற்குப் பயன்படாத செல்வரது செல்வம் நிலத்துக்குப் பொறை யென்றும் கோயமான் எண்ணி யிருந்தான். இவனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் ஒரு கால் சென்று கண்டார். அவனது மனப் பண்பைத் தெளிந்தார். ஈர்ந்தூர் கிழானை கோயமான்,

'நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே......
இன்மை தீர வேண்டின் எம்மொடு
நீயும் வம்மோ, முதுவாய் இரவல!
யாம் தன்இரக்குங் காலைத் தான்எம்
உண்ணு மருங்கு காட்டித் தன்னூர்க்
கருங் கைக் கொல்லனை இரக்கும்
திருந்திய நெடுவேல் வடித்திசின் எனவே'

என்று பாடியுள்ளார். இதன் கண், 'வறியார் வறுமை கண் டதும், கொல்லனை யழைத்து, பார் இவர் வயிற்றை; எடு அந்த வேலை; வடி அதன் வாயை; கொடு அதைக் கையில்; செல்வேன்; செல்வரை வெல்வேன்; பொருள் மிகக் கொள்வேன்; இவர் வறுமையைக் கொல்வேன்' என்பான், 'எம் உண்ணுமருங்கு காட்டித் தன்னூர்க் கருங்கைக் கொல்லனை யிரக்கும் திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே' என்பது கருதத்தக்கது.

இத்தகைய மனப்பான்மை வறுமை மிக்க வழித் தீநெறியில் மக்களைச் செலுத்தி உரிமை வாழ்வுக்கு ஊறுசெய்யும். ஆத லால் உரிமை வாழ்வு வறுமை யில்லாமைக்குரிய வழி பலவும் ஆக்கிக் கொள்ளத் தக்க அறிவுரைகள் வழங்குவது இலக்கியங் கட்கு ஏற்ற பணியாகும்.

(தொடரும்.)

# பழக்கமும் வழக்கமும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 23, மலர் 5, 6, பக்கம் 132.)

## வழக்கம்.

செயற்கைப் பயிற்சியினைப் பழகப் பழக, அது நாளடைவில் இயற்கை நிகழ்ச்சியாய் மாறி, இயல்பு வழக்கமாய் வருவது உலகத் தியற்கை. அறிவான்ற சான்றோர் அரிதின் உழந்து பயின்று தேடிய பழக்க வகைகள் வழக்கங்களாக இயங்கி வருதலில்லையேல், குறுவாழ்வில், நிறைந்த அறிவையும் இன்ப நிலையையும் பெறுதல் அமையாது. மக்களை வருக்கும் தொல்லோரின் பழக்க வழக்கங்கள் வழி வகுத்துத் துணை புரிதலால், அவற்றினைக் கையகன்று மறுத்தால் துன்பமும், பேணி மதித்தால் இன்பமும் கைகூடும். இத்தகைய பழக்க வழக்கத்தைத் தெய்வத் தொல்லாசிரியர் தொல்காப்பியர், தமது இயற் றமிழ் இலக்கண நூன் முழுமையும், 'தகுதியும் வழக்கும்' என உயிர்ப் பியல்பு தோன்றப் பெரிதெடுத்து விதந்துள்ளார். தொன்று தொட்டுப் பயன் கண்டு பழகிய செயற்கைப் பழக்கங்களினின்றே வரும் வழக்க மென்பது, காலக் கூறு எத்துணை கழியினும், உலக நடை, விளக்கம் ஒளியுற்றுத் திகழ்தற்கு இன்றி யமையாததாதலைத், தொல்காப்பியர், தனக்குள் தேறி, உலகியல் நிலவுதலுக் கேற்ற அடிப்படை, வழக்கும் செய்யுளு மென முடிபுகண்டார்.

அறத்தானும் தவத்தானும் வந்த செயற்கைப் பழக்கங்களில் துறைபோயினவ ராய சான்றோ ராணையின் வழி உலக நிகழ்ச்சி செல்கின்ற தென்பது 'வழக் கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சி அவர்கட் டாகலான' என ஆசிரியர் தொல்காப்பியனுர் கிளந் தோதியதனுல் உணரப் படும். பல்வகையானும் அச் சான்றோர்களது செயற் பழக்கம் பின்னர் வழி வழியாகப் பிறரால் தழுவி யேற்கும் முறையில் எளிய வழக்கமாகப் பயன் றெரிவுடையதாகவும் விளங்கினுல், அது 'பயன் நிலை புரிந்த வழக்காகும்.' இங்ஙனம் 'அறியத் தோன்றிய வழக்கு' மக்கள் பால் மருவி, அவராலும், உணர்ந்தோ, உணராமலோ அல்லது உணர்ந்து உணராமலோ, ஆற்றலுடன் இயல்பாய் நெறிப் பட உந்துத லுற்றுத், தொடர்பாக வழங்கலுறின், அது 'நெறிப்பட வழங்கிய வழக்காகு'மென்க, இத்தகைய வழக்கு, இறை இயற்கைத் தன்மை பெற்று, உலகின்கண் இயக்கங் கொள்ளின், அஃது எக்காலத்தும் மாறுததாய், உலகியல் வழக்கெனு எளிதாக நிகழும்.

உயர்ந்தோ ரொழுகிய வாற்ருன், சார்ந் தொழுகல் உலகியல்பு ஆகலின், உலகியல் வழக்கினைத், 'தொன்மை யவாமேனும், எவையும் நன்ருகா, இன்று தோன்றிய வேனு மெவையும்தீதாகா' எனும் முறைமையிற் பகுத்தறிந்து, வழக்கு வழு வென்று களையப்படுமாயின் நன்றே. ஏலாதன வொழித்து, ஏற்பன கொண்டு, மெய்த்தலைப் பட்ட வழக்கினைத் தேர்ந்து, காலத்துக்கும், நிலைக்கும், உலக நடைக்கும், ஊறு நேராவாறு, அஃதொடு பொருந்தி யொழுகவேண்டுவது இன்றியமையாத தாகின்றது. பாசி படர்ந்த பழக்க வழக்கத் தேக்கங்களில் அழுத்தங் கொண்டு உரனும் நடையுமிழந்து, கால வெள்ள முழக்கத்துடன் முன்னேறும் புதுநலப் பொலிவைக் கைவிடுவது பேதைமை. இதுபற்றியே, தொல்லாணை நல்லாசிரிய ராய தெய்வப் புலவர், உயர்ந்தோர் வழிநின்று தகவொழுகுதல் அறிவென்பதை,

'எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு'

என்ற குறள் வெண்பாவில் புலப்படுத்தி, அறநூல்களில் கூறப்பட்டவை சில, கால இட வேறுபாட்டான் புறத்தளவி லாவது வேறுபடுத லுள தாதலின், பெருந்தகவும், பெரு நடையு முடைய உயர்ந்தோர், அவ் வேறுபாட்டை மிக விழிப்பாய்க் கண்டறிந் தொழுகுவாராதல் பற்றி, அதுவே நன்மக்கள் பின்பற்றற் குரித்தென்பதை அறிவித்தற்கு,

'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்'

என மற்ருேர் மணிக் குறளில் விளக்கியுள்ளார்.

ஈண்டு அறத்தோ டொட்ட வொழுக லென்னுது, உலகத்தோடு ஒட்டவொழுகல் எனத் திருவள்ளுவர் காரண காரிய இயைபுடன் எடுத்துக் கிளக்கும் பான்மையால், ஒட்டுதற் குரிய மெய்த்தலைப்பட்ட காலவழக்கி னுண்மை பெறப்படுதல் காண்க. எனவே, பழமையின் நிலையான உண்மையினைக் காலத்திற்கேற்றவாறு பயின்று, அப்பயிற்சியுடன் கால மாறுபாட்டிற் கேற்ற புதுமைகளைச் சேர்த்து, வழக்காற்றில் உரிமை வேட்கையால் முன்னேறக் கொண்டு வருவது அறிவாகு மென்பதூஉம் பெற்ரும்.

'உலக மென்ப துயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சி யவர்கட் டாக லான' என்பது தொல்காப்பியம். சான்ருேர் சார்பில் பொதுமக்களுக்காக, வழக்கம் உலகில் இயற்கை யாற்றலுடன் இயங்கி, கருத்துக்களை ஈர்த்துச் செல்லத் தகுந்ததாதல் பற்றி, கருத்த மாண்பா டுடை யா ரிருவர்

அறங்கெழு நல்லவை யேறித் தொடுக்கும் முறையீடும், பொதுக்கூக்குரல் இறைவன் குரல் Vox Populi Vox Dei) என்ற அறத்தோ டொட்ட, வழக்காற்றையே அடிப்படை யாகக் கொண்டு மேற்செல்லுதலான், அது வழக்கு எனும் பெயரால் பொதுவாக வ்ழங்கப்படுதலும் அறியத்தகும். 'வழக்கு' போன்ற இத்தகைய சீர் மலிந்த சொற்கள், வேறெம்மொழியிலும் காண வியலாதவாறு, பொருண்மை தோன்ற, எளிய முறையில் தமிழ்மொழியில் அமைவுற் றிருப்பதி னியல்பு கண்டு மகிழ்தல் சாலவும் விரும்பற் பாலது.

பல்லாயிர ஆண்டுகளுக்குமுன் மக்கள்பால் வழங்கி வந்த உலகியல் வழக்குகளும், அவற்றை ஒழுங்கு படுத்தி யமைத்துப் பயன் கொள்ளும் நெறிகளும், நலங்கெழு நாகரிக வாழ்க்கை நடைமுறைகளும் அறிதற்கு, அவ்வக் காலத்தே திகழ்ந்த நல்லிசைப் புலவர்கள் தம்மயர்வற மதி நல நுட்பத்தால் மாந்தர் தெருள் கொள்ள அருளப்பெற்ற செய்யுளா றென்னும் புலனெறி வழக்கு, சீரிய கருவியாதல் ஓர்ந் துணரற்பாலது. புலவர்பெருமக்கள் வெறுஞ்சொற்கள் மூலமாக அரிய பெரிய வழக்குண்மைகளையும், கருத்துக் களையும், எழி லரும்பும்படிக் கோத்து, இன்னோசை புணர்த் திச் செல்லும் செய்யுட்களைப் பயில்வோர், அச் செய்யுட் களில் பொதிந்த கருத்துக்களை நேரே விளங்கக் கண்டு, அவைகளில் உள்ளம் அழுந்திநின்று, அளவுபடாத விழுமிய இன்பநிலை அடைவ ராதலால், உய்வகை யுணர்த்துஞ் செய்யுள் வழக்கின் வரையறையும், பெற்றிமையும், நெறிமையும், செய்யுளில் மேவிய சொல் லோவியத்தின் மாட்சியும், கவர்ச்சியும் எடுத்துரைத்தல் அரிதரிது.

நல்லிசைப் புலவர்களாக்கிய சொல் லோவியம், உலகி யல் வழக்கிற்கு உயர்ப் பூட்டி, கற்றோரது நல்வாழ்வு நிலைக்கு அரணாக விளங்குதல் ஒருதலை. கல்வி யறிவு வாய்க்கப் பெறாதவரும், எளிதில் வாழ்வின் பயனைக், கண் செவி மூலம் உணர்ந்துகொள்ள, நாடகவழக்கும் பண்டுதொட்டே விரவி வந்துள்ளது அறிதற் பாலது. இதுபற்றியே, தமிழ்ப் பெரும் புலவர்களுக் கெல்லாம புலவராய தொல்காப்பியர்,

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்'

என வாய்மலர்ந்து பெய்து வைத்தருளினர். இவ் விருவகை வழக்குகள் மூலம், புலனெறி வழக்கம் முகிழ்த்து விளங்கு வதால், புலனெறி வழக்க மென்பது, மன்பதை, வாழ்வின் மெய்யின்பத் தலைவிணைப், புலனும் மனனும் விழுப்ப முற

நுகர்ந்து மகிழ்தலே, அழியா இயல்புடைய செய்யுளில், மதி நலஞ் சான்ற புலவர்கள், வீதந்தும் வியந்தும் உயிர்ப்பாற்றலுடன் இன்பமுறப்படைக்கும்அனுபவமுறையாகுமென்ப. பண்டைத் தமிழ்ப்புலமையாளர், நனிநாகரிக நன்மக்கட் டொகுதி, தமக்குரிய மாண்புநிலை எய்துவதற்கு, இலக்கிய உணர்வாட்சி இன்றியமையாத தெனக் கருதி, உணர்வை எழச்செய்து, கருத்தையும் ஈர்த்துச் செல்ல வல்லது, செய்யுளல்லது வேறில்லை யெனக் கருத்துட் கொண்டு, எண்ணிறந்த செய்யுட்களைப் படைப்புக் கடவுளர் போன்று நிலைக்கச் செய்ததினுல், உணர்வுடையார் உள்ளத்தில் பல நெகிழ்ச்சிகளை யெழுப்பும் பழைய தமிழ் இலக்கியம் முழுவதூஉம், உரை நடை நூலாக இல்லாது செய்யுள் நூல்களாக இருப்பது, மனதிற்கு மகிழ்ச்சியினை விளைவிப்பதாகும். வாழ்க்கை நிலை மெய்ந்நிலை யுறும் இயற்கை யுண்மையினைத் தெரிக்கும் புலனெறி வழக்கின் சொல் லோவியமே செய்யுட்க ளாதலான், அவை விளக்கும், இன்பம், உயிரின் உள்ளுறை நிகழ்ச்சியாகிய பேரின்பமாய் நிலைபெறுதல், அவை தம்மைச் சிறிதாழ்ந்துணர்ந்து பயில்வார் நன்கறிவர். இத்தகைய சீர்சால் சிறப்புடைய செய்யுட்களின் உள்ளுறைகளை, அகக் கண்ணுற் கண்டு, இன்புறுதலோ டல்லாது, அத்தகைய செய்யுட்களை இயற்றும் வன்மைபெற விரும்புதல், அச்செய்யுட்களை ஊன்றிப் பயிறலின் முடி பயனெனத் தமிழ்மக்கள் கருதிப், பயன்சுரக்கும் வழிகளை நாடவேண்டுவது அன்னவர்க்குரிய கடனுகும். செய்யுட்களின் பொருட் செறிவினையும், சிறப்பினையும் அறிந்து, இன்புறுதற் கேற்ற கருவி செஞ் சொற்களாதலான், செய்யுள் வழக்கில் வழங்கும் சொல் லீட்டம், பேச்சு வழக்கில் நிலவி வருவதைவிட மிகப் பெரிதாகுமென்பர், அனுபவம் நிறைந்த அறிஞர்.

எனவே பண்டைத் தமிழர்தம், பழக்கங்களும் வழக்கங்களும் நிலைதிரிந்து, பழமை அழிந்து போகாவண்ணமும், இற்றைக்கு பல்லாண்டுகள் கழித்து பிற்றை நாள் வாழும் தமிழ் மக்களும் அவைகளை அறிந்து பயனுறுதற்குத், தமிழ் மொழியின் தனிநிலை தெரிக்கும் பழந்தமிழ் பெருநூல்களில் வழங்கிய சொற்களைப் பேராதரவாகக் கொண்டே, தொல்லியன் மரீஇய பழக்க வழக்கங்களை அறுதியிட்டுத் தமிழ்மொழியோ டியைந்த வழக்கைப் புறக்கணிக்காது நிலைநிறுத்துவது தம் கடமை யென ஒவ்வொரு தமிழ் ஆண்மையரும் கருத்திருத்தற் பாலது.